# யா/வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்
# வல்வெட்டித்துறை.

# வருடாந்த பரிசில்தின விழா

## 07.01.2017

## மகுடவாசகம் (MOTTO)

**"கல்வியே ஒளி"**

## தொலை நோக்கு (VISION)

**விவேகமும் செயற்றிறனும் உள்ள நற்பிரஜைகளாக்குதல்.**

## குறிக்கோள் (MISSION)

- **செயன்முறைக்கற்றல் புறக்கிருத்தியச் செயற்பாடுகள் ஆகியன மூலம் கற்றலை மேம்படுத்துதல்.**
- **ஆசிரியர் வாண்மையை விருத்தி செய்தல்.**
- **சமூகத்தை பங்காளர்களாக்குதல்.**

# நிகழ்ச்சி நிரல்

- ✧ விருந்தினரை Band அணியுடன் அழைத்துவருதல்
- ✧ மங்கல விளக்கேற்றல்
- ✧ இறை வணக்கம்
- ✧ தமிழ்மொழி வாழ்த்து
- ✧ வரவேற்புரை

  **திருமதி சி. கமலசிங்கம்**

  **செல்வன் ஞா. ஆருஜன்** (ஆங்கிலத்தில்)
- ✧ வரவேற்பு நடனம்
- ✧ ஆசியுரை
- ✧ வாழ்த்துரை
- ✧ தலைமை உரையும் அதிபர் அறிக்கையும்
- ✧ ஆங்கில நடனம் (Barbis Dance) Gr - 1 Girls
- ✧ குழு நடனம்
- ✧ தனி நடனம் - (முன்பள்ளி மாணவி)
- ✧ Music Dance - Grade - 1 - Boys
- ✧ கோலாட்டம் - தரம் - 2, 3 மாணவர்
- ✧ குழு நடனம் - கனிஷ்ட மாணவர் (முன்பள்ளி)
- ✧ Song - Grade 4 - Boys
- ✧ கரகம் - தரம் 4, 5 மாணவர்
- ✧ ஆத்திசூடி (முன்பள்ளி)
- ✧ Poem - (Pre school student)
- ✧ சிறப்பு விருந்தினர் உரை
- ✧ அம்மன் கரகம் (முன்பள்ளி)
- ✧ பரிசில் வழங்கல்
- ✧ கோலாட்டம் - தரம் - 5 மாணவர்
- ✧ தாளலய நாடகம் - தரம் - 3 மாணவர்
- ✧ Timber Dance (Grade 2, 3, 4 - Girls)
- ✧ பிரதம விருந்தினர் உரை
- ✧ நாடகம் - பொன்நாடு - தரம் - 5 மாணவர்
- ✧ நன்றியுரை - **திரு. சி. கருணாகரன்** (செயலாளர் பா.அ.குழு)
- ✧ பாடசாலைக் கீதம்

# யா/வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்
## வல்வெட்டித்துறை.

# பரிசில் தினம் - 2016

**காலம் 07.01.2017 சனிக்கிழமை,**
**மு.ப. 9.00 மணி**
**இடம் : பாடசாலை மண்டபம்**

**தலைவர்**

**திரு. வேலுப்பிள்ளை மகேந்திரன்** (அதிபர்)

**பிரதம விருந்தினர்**

**உயர்திரு. வேலுப்பிள்ளை சிவயோகன்**
(கௌரவ மாகாண சபை உறுப்பினர், வடக்கு மாகாணம்)

**சிறப்பு விருந்தினர்**

**உயர்திரு. கணேஸ்வரன் வேலாயுதம்**
(சிவன் பவுண்டேசன் நிறுவுனர்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**பெற்றோர், பழைய மாணவர்,**
**பாடசாலை அபிவிருத்திக் குழுவினர்**
**நலன் விரும்பிகள்.**

**விழா அனுசரணை:**
வல்வெட்டி நலன்புரிச் சங்கம் (கனடா, ஐக்கிய இராச்சியம்)

## அதிபர் அறிக்கை

எமது பாடசாலையின் பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் கௌரவ வடக்கு மாகாண சபை உறுப்பினர் உயர்திரு வேலுப்பிள்ளை சிவயோகன் அவர்களே! சிறப்பு விருந்தினராக வருகைதந்துள்ள சிவன் அறக்கட்டளை நிதியத்தின் ஸ்தாபகர் உயர்திரு கணேஸ்வரன் வேலாயுதம் அவர்களே! வல்வெட்டி வேவில் விக்னேஸ்வரப் பெருமான் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ பாலச்சந்திரக்குருக்கள் அவர்களே! வல்வெட்டி வேவில் விக்னேஸ்வரப் பெருமான் ஆலய குரு பிரம்மஸ்ரீ விக்னேஸ்வரக் குருக்கள் அவர்களே! அரசியல் பிரமுகர்களே! வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களே! பிரதிக் கல்விப் பணிப்பாளர்களே! உதவிக் கல்விப் பணிப்பாளர்களே! வடக்கு மாகாண கல்வி அமைச்சின் ஓய்வுநிலை பிரதிச் செயலர் திரு. வே. தி. செல்வரட்ணம் அவர்களே! கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. கே. கே. யோகநாதன் அவர்களே, அயற் பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே! வல்வெட்டி பிரிவு கிராம சேவகர் அவர்களே! ஏனைய அரச ஊழியர்களே! பாடசாலை அபிவிருத்திக் குழுவின் செயலாளர் திரு. சி. கருணாகரன் அவர்களே! மற்றும் உறுப்பினர்களே! எமது பாடசாலை ஆசிரியர் களே! பெற்றோர்களே! நலன்விரும்பிகளே! வல்வெட்டி நலன்புரிச் சங்க புலம்பெயர் உறவுகளே! மாணவர்களே! உங்கள் அனைவருக்கும் இப்பரிசில்தின நாளில் அன்பு நிறைந்த வணக்கத்தைத் தெரிவித்து வருக வருக என வரவேற்றுக் கொள்கின்றேன்.

வடமராட்சி பிரதேசத்தின் பெருமைமிகு எமது பாடசாலை சைவப் பாரம்பரியமுடையது. இப் பாடசாலை 1894இல் கிறீஸ்தவ பாதிரிமாரினால் யா/வல்வெட்டி அ.மி.த.க. பாடசாலை என ஆரம்பிக்கப்பட்டதெனினும், பிரதேச மக்களின் சைவசமயப் பாரம்பரியத்தை வளர்க்கவேண்டும் என அப்போதிருந்த பாடசாலையின் முன்னோடிகள் பாடசாலையின் பெயரை யா/வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம் என 1984ஆம் ஆண்டில்

பெயர் மாற்றம் செய்தனர். எது எப்படி இருந்துபோதிலும் நாம் அமெரிக்க மிசனரிமார்களை நன்றியுடன் நினைவுகூறும் இவ்வேளை பாடசாலையை சைவப் பாடசாலையாக மாற்றியமைத்த அந்த பெருந்தகைகளையும் ஒன்றுசேர நினைவு கூறுகின்றோம். இந்த வருடம் எமது பாடசாலைக்கு வயது 122 வருடங்கள். இன்னும் மூன்று வருடங்களில் அதாவது 2019 இல் பாடசாலை 125வது ஆண்டை நிறைவுசெய்யும் அவ்வேளை பாடசாலையின் மாணவர்தொகையும் சுமார் 125 மாணவர்களை கொண்டிருக்கும் என எதிர்பார்க்கும்.

இவ்வேளையில் 2016ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையை இப் பரிசளிப்பு விழாவில் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இன்றைய பரிசில்தின நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வருகைதந்து விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் வடக்கு மாகாண சபையின் கௌரவ உறுப்பினர் மதிப்பிற்குரிய உயர்திரு வேலுப்பிள்ளை சிவயோகன் அவர்களை அறிமுகம் செய்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இன்றைய நிகழ்வின் முதன்மை அதிதியான பெரு மதிப்பிற்குரிய வடக்கு மாகாண சபையின் கௌரவ உறுப்பினர் உயர்திரு வேலுப்பிள்ளை சிவயோகன் அவர்கள் தமது ஆரம்பக்கல்வியை யா/ அல்வாய் வடக்கு ஸ்ரீலங்கா வித்தியாலயத்தில் கற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து இடைநிலை மற்றும் உயர்நிலைக் கல்வியை யா/நெல்லியடி மத்திய கல்லூரியிலும் கற்று பொறியியல் (Engineering) படிப்பினை கட்டுப்பொத்த வளாகத்தில் கற்று பொறியியலாளர் (Engineer) ஆனார். படிப்பை முடித்து வீதி அபிவிருத்தி திணைக்களத்தில் பொறியியலாளராக கடமையைப் பொறுப்பேற்றதுடன் கிளிநொச்சி பிராந்திய நிறைவேற்றுப் பொறியியலாளராக பெரும் பணியாற்றியவர்.

அரசாங்கத்துறையில் கடமையாற்றி பின் மக்களுக்கு நேரடியாக சேவையாற்ற வேண்டுமென எண்ணி 21.09.2013 இல் நடைபெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு

வெற்றிபெற்று மக்கள் பிரதிநிதியாக வடக்கு மாகாண சபையின் உறுப்பினராக, தெரிவானதுடன் பொதுமக்கள் முறைப்பாட்டுக் கமிட்டி, கடல்வளம், போக்குவரத்து, வியாபாரம் மற்றும் கிராமிய அபிவிருத்தி கமிட்டிகளிலும் அமைச்சர்களின் ஆலோசனைக்குழு உறுப்பினராகவும் அரும்பணியாற்றுவதுடன் வடமராட்சிக் கல்வி அபிவிருத்தி தொடர்பாக மிகவும் விழிப்புடன் கருமமாற்றுவதோடு பாடசாலைகளுக்கு தேவையான பௌதிக வள ஒதுக்கீட்டைச் செய்தும் கல்வியை மேலும் மேலும் வளர்த்தெடுப்பதற்காக தம்மாலான முழு உதவிகளையும் வழங்கிவரும் வடக்கு மாகாணசபை கௌரவ உறுப்பினர் உயர்திரு. வேலுப்பிள்ளை சிவயோகன் அவர்களை முதன்மை விருந்தினராக அழைப்பதில் எமது பாடசாலைச் சமூகம் பெருமை அடைகிறது. மேலும் இன்றைய பரிசில் நாளின் முதன்மை விருந்தினர் அவர்கள் எமது பாடசாலையில் கடந்த 2015ஆம் வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்று தெரிவுசெய்யப்பட்ட மாணவிகளான செல்வி திருஞானசேகரன் தேனுகா, செல்வி மனோகரன் மகிந்தா அத்துடன் செல்வி பஞ்சலிங்கம் விஷ்ணுகா ஆகிய மூவருக்கும் தலா ஒவ்வொரு துவிச்சக்கரவண்டிகளை விஷேட பரிசாக வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தில் வைத்து 07.09.2016 இல் வழங்கியுள்ளதுடன் மற்றும் மாகாண சபையின் 2016ஆம் ஆண்டிற்கான பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டின் மூலம் கணனி (System) மற்றும் Laser Printer ஒன்றையும் கொள்வனவு செய்ய ரூ. 60000/= ஒதுக்கித் தந்துள்ளார்.

கௌரவ முதன்மை விருந்தினர் அவர்கள் மாணவிகளுக்கான துவிச்சக்கரவண்டிகளை நாம் கேட்காதபோதே மனமுவந்து தாமாக விஷேட பரிசிலாக வழங்கி மாணவிகளை கௌரவித்திருந்தார். இவற்றுக்காக அவருக்கு நன்றிகள் பல கூறுகின்றோம்.

அடுத்து இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக வருகைதந்து விழாவை கௌரவப்படுத்திக் கொண்டிருக்கும் சிவன் அறக்கட்டளை நிறுவன ஸ்தாபகர் சமூகசேவகர் மற்றும் கொடைவள்ளல் உயர்திரு கணேஸ்வரன் வேலாயுதம் அவர்களை அறிமுகம்

செய்வதில் பெருமகிழ்வடைகின்றேன். உயர்திரு கணேஸ்வரன் வேலாயுதம் அவர்கள் மனிதநேயம் மிக்க மகான் எனச் சொல்லக் கூடியவர். தொடக்கத்தில் மக்கள் பணி செய்ய ஆரம்பித்தபோது இருதயநோய் உள்ளவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு பெருமளவு பணத்தினை வழங்கிவந்தவர். அத்துடன் இன்று விஷேட தேவையுள்ள மாணவர்களுக்கு கல்வி வழங்கவும், மருத்துவ உதவிகளுடன் பராமரிப்புச் செய்வதற்காகவும் பெரும் உதவிகளை வழங்கிவருபவர். இதற்காக இலங்கையில் வாழும் மூவின மக்களையும் எவ்வித வேறுபாடுகள் எதுவுமின்றி பராமரிக்கும் நோக்குடன் மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் நகரத்திலிருந்து பல மைல்கள் தூரத்தில் சேவை நிலையம் (Home) ஒன்றையும் திறம்பட இயக்கி வருவதுடன் விஷேட தேவையுள்ள மாணவர்கள் தொடர்பாக முன்பள்ளிகள் முதல் பல்கலைக்கழகம் வரை அவர்களின் முறையான கல்வி, சுகாதார வசதிகளை தொண்டு அடிப்படையில் வழங்கி உதவிபுரிந்து வருகின்றார். மேலும் 2005ஆம் ஆண்டில் இந்த தொண்டு நிறுவனம் தொடங்குவது பற்றி அவர் மனதில் எண்ணம் ஏற்பட்டு 2008 இந் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டு 2009இல் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றது. இவ்வாறு அறம் செழிக்க வந்துதித்த உயர்திரு கணேஸ்வரன் வேலாயுதம் அவர்களை சிறப்புவிருந்தினராக இன்றைய பரிசில் தின விழாவிற்கு அழைப்பதில் பாடசாலைச் சமூகம் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறது.

கடந்த வருடத்திலிருந்து பாடசாலையின் பரிசளிப்பு விழாவானது 3ஆம் தவணைப் பரீட்சை நிறைவுற்றதும் நடைபெறுவது வழமையாகியுள்ளது. ஒரு வருடத்திற்குரிய ஒவ்வொரு மாணவரதும் பெறுபேறுகள் ஆய்வு செய்யப்பட்டு பரிசு பெறும் மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். அவர்களுக்கான பரிசுகள் யாவும் மாணவர்களுக்கு முழுமையாகப் பயனளிக்க வேண்டுமென்ற உயர்ந்த சிந்தனையோடு பரிசுக் கூப்பன்களாக வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த வருடம் தரம் 01இல் 12 மாணவர்களே புதிதாகச் சேர்ந்திருந்தனர். ஆனால் இவ்வருடம் 29 மாணவர்கள் புதிதாக தரம் 01இல் சேர்ந்துள்ளனர். இது ஏறக்குறைய 150% மாணவர் அதிகரிப்பாகும். கூடுதலான மாணவர்கள் பாடசாலையில் சேர்வதென்பது பாடசாலையின்மேல் பெற்றோரின் நம்பிக்கையும் பற்றுறுதியும் வெளிப்படுத்துகின்றது.

ஆரம்ப பாடசாலைகளின் அளவுகோலாக புலமைப்பரிசில் பரீட்சை புள்ளிகள் நோக்கப்படுவது வழமை. அந்தவகையில் 2016இல் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 15 மாணவர்கள் தோற்றி 12 பிள்ளைகள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர். புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளே சித்திப்புள்ளியாகும் என்பது இங்கு கவனிக்கப்படவேண்டியது. அந்தவகையில் தரம் 5 வகுப்பாசிரியர் திருமதி ஸ்ரீ. சாந்தகுமார் அவர்களையும் மாணவர்களுக்கு தரம் 01 இலிருந்து கல்வி புகட்டிய ஏனைய ஆசிரியர்களையும் நன்றியுடன் பாராட்டுகின்றேன். இன்று பாடசாலைகள் யாவும் பிள்ளைநேயப் பாடசாலையாக செயற்படும் நிலையில், மாணவர்களின் ஒழுக்கம் மற்றும் கல்விச் செயற்பாடுகளில் பெற்றோர் அதீத அக்கறை காட்டவேண்டியுள்ளது. குறிப்பாக மாணவர்களை ஆக்கிரமித்துள்ள நவீன இலத்திரனியல் சாதனங்கள் அவர்களின் பெருமளவு நேரத்தினை வீணடிப்பதையும் கண்டுள்ளோம்.

## இணை பாடவிதான செயற்பாடுகள்

இணை பாடவிதான செயற்பாடுகளான திருக்குறள் மனனம், தமிழ்த்தினப் போட்டி, விரைவு கணிதம், ஆங்கில தினம், விளையாட்டுப் போட்டி, செயற்பட்டு மகிழ்வோம், சித்திரப்போட்டி, மாலை கட்டுதல், கோலப்போட்டி, பேச்சுப் போட்டி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன் மனனப்போட்டி, லண்டன் CWN இன் கணிதப்போட்டி, வல்வெட்டித்துறை நகரசபையின் பொது அறிவு மற்றும் சித்திரப்போட்டிகள் யாவற்றிலும் எமது மாணவர்கள் காத்திரமான பங்களிப்புச் செய்து கணிசமான வெற்றிகளையும் பெற்றுக்கொண்டனர். இச் செயற்பாடுகளில் கலந்துகொண்ட

மாணவர்களையும் அவர்களை வழிப்படுத்திய ஆசிரியப் பெரு மக்களையும் பாராட்டி நன்றிகூறி வாழ்த்துகிறேன்.

## ஆசிரிய மாநாடு

இந்த ஆண்டு வடமராட்சி வலயக்கல்வி அலுவலகம் நடாத்திய ஆசிரிய மாநாட்டிற்கு எமது பாடசாலை சார்பாக ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. இதில் திரு. பொன்னுத்துரை உதயகுமார் ஆசிரியரின் பணி பாராட்டத்தக்கது. இம் மாநாட்டில் கலந்துகொண்ட திருமதி சி. கமலசிங்கம், திருமதி ஸ்ரீ. சாந்தகுமார் மற்றும் திரு. ஆ. தங்கரூபன் இவர்களையும் பாராட்டுகின்றேன்.

## பௌதீக வளம்

இப் பாடசாலையைப் பொறுத்தவரை பெரும்பாலான பௌதீக வளங்கள் யாவும் நிறைவுசெய்யப்பட்டாலும் காலத்தின் தேவைக் கேற்ப புதிய வளங்களை நாம் பெறவேண்டிய தேவையுள்ளது. எனவே எமது பாடசாலையின் பௌதீக வளங்களில் அதிக வளங்களை சேர்ப்பதற்கு உதவிய மாகாண கல்வித் திணைக்களம், வலயக் கல்வித் திணைக்களம், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் மற்றும் பெற்றோர் யாவருக்கும் எமது நன்றிகள்.

இவ்வருட அரசாங்க நிதிஒதுக்கீட்டின் மூலம் ரூ.280,000/= செலவில் பாடசாலை நூலகம் புனரமைப்புச் செய்யப்பட்டு மிகவும் அழகிய நிலையில் மாணவர்களால் விரும்பி பயன்படுத்தப்படு கின்றது.

மற்றும் ரூ. 696000/= செலவில் ஆசிரியர்களுக்கான Wash room ஒன்றும், 103 அடி நீள எல்லை மதிலும், தேவையான நீர் குழாய் பொருத்து வேலைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இவ் வேலைகளை பொறுப்புடன் மேற்பார்வை செய்து உதவிய திரு. ஆ. ஞானேந்திரன் (கேசவன்) அவர்களை பாராட்டுகிறேன்.

மேலும் பாடசாலை வளவில் கவின் நிலையை ஏற்படுத்தும் நோக்கில் கிழக்குப்புற வளவில் பூஞ்செடிகளை நாட்டும் நோக்குடன் அதற்குரிய அழகுபடுத்தல் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இவ் வேலைத்திட்டம் படிப்படியாக மேலும் விரிவாக்கப்படும் என எதிர்பார்க்கலாம்.

## 2016இல் கிடைக்கப்பெற்ற உதவிகள்

இந்த ஆண்டு விளையாட்டுப் போட்டிக்குரிய செலவு ரூ. 43990/= ஐ வல்வெட்டி நலன்புரிச்சங்க லண்டன் மற்றும் கனடாக் கிளைகள் வழங்கியுள்ளன. கனடாவில் வதியும் பழைய மாணவரான திரு. அன்னலிங்கம் அவர்கள் ஆயிரம் லீற்றர் பிளாஸ்ரிக் நீர்தாங்கியினையும் அதற்கான இணைப்பினையும் செய்து அன்பளிப்புச் செய்துள்ளார். சுவிற்சலாந்து நாட்டில் வதியும் பழைய மாணவரான திரு. உலகநாதன் அவர்கள் ஐந்து மின்விசிறிகளையும் மேல்மாடிக்கான நெற் அடித்தும் அன்பளிப்புச் செய்துள்ளார். இவ்வுதவிகள் கிடைக்க ஆவன செய்த திரு. ச. கிருஷ்ணானந்தன் (அருள்) அவர்களை நன்றியுடன் பாராட்டுகின்றேன்.

சுவிற்சலாந்து நாட்டில் வதியும் திரு. எஸ். விஜயகுமார் இரண்டு மின்விசிறிகளை அன்பளிப்புச் செய்துள்ளார். மற்றும் மாகாண சபை உறுப்பினர்களான கௌரவ வே. சிவயோகன் அவர்கள் கணனி ஒன்றும் மற்றும் மூன்று துவிச்சக்கரவண்டி களையும் கௌரவ சி. அகிலதாஸ் அவர்கள் கண்ணாடி அலுமாரி இரண்டு மற்றும் நூலகத்திற்கான நூல்கள் (இவற்றுக்காக மொத்தப் பெறுமதி 50000/=), கௌரவ சுகிர்தன் அவர்கள் நூலகத்திற்கான மேசைகள் (30000/=) இவ்வுதவிகள் கிடைக்க உதவிய திரு. ஆ. ஞானேந்திரன் (கேசவன்) அவர்கள், மேலும் தனது சொந்த செலவில் ரூ. 31275/= செலவு செய்து அத்தியாவசியமான கட்டுமான வேலைகளை செய்து அன்பளிப்புச் செய்துள்ளார். அனைவருக்கும் இவ்வேளையில் நன்றிகூறி பாராட்டுகின்றேன்.

---

21.10.2016ல் வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தால் நடாத்தப்பட்ட பொதுவிவேகப் பரீட்சையில் சித்தியடைந்த தரம் 4 ல் கல்வி பயிலும் 13 மாணவர்களை கௌரவித்து சிறப்பு பரிசு வழங்குவதற்காக எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியை திருமதி தவமலர் குமாரசாமி ஞாபகார்த்தமாக ரூ.10000.00 அவரது குடும்பத்தினரால் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்கும் இவ்வேளையில் நன்றி கூறுகின்றோம்

எமது பாடசாலை அபிவிருத்திக்குழுச் செயலாளர் திரு. சி. கருணாகரன் அவர்கள் மின்விசிறிகள் பொருத்துவதற்கான செலவாக ரூ. 18700/= வை வழங்கியுதவியுள்ளார். அவருக்கும் எமது நன்றிகளும் பாராட்டுக்களும் உரித்தாகட்டும்.

திரு. ச. கிருஷ்ணானந்தன் (அருள்) ரூ. 39270/= வை செலவு செய்து குடிநீர் தொகுதியொன்றை, இலங்கை நீர்வழங்கல் சபையிலிருந்து பெற்று அன்பளிப்புச் செய்துள்ளார். மீண்டும் அவருக்கு நன்றி கூறி பாராட்டுகின்றேன். அவர் பணி பாடசாலைக்கு தொடர்ந்தும் கிடைக்க இறைவன் அருள்பாலிக்க வேண்டுகிறேன்.

சுவிற்சலாந்து நாட்டில் வதியும் பழைய மாணவரான திரு. எதிர்மன்னசிங்கம் சின்னத்தம்பி அவர்கள் ரூ. 570000/= பெறுமதியான விளையாட்டு திடலுக்கான பார்வையாளர் அரங்கம் ஒன்றை அமரர் ஆறுமுகம் சுப்பிரமணியம் (பொன்னையா மாஸ்டர்) ஞாபகார்த்தமாக நிறுவி அன்பளிப்புச் செய்துள்ளார். அவரை வெறும் சொற்களால் மட்டும் பாராட்டுவது தகுமா என என்மனம் ஏங்குகிறது. மேற்படி வேலைகளை மேற்பார்வை செய்த அவரது உறவுகளான திரு. செ. சின்னத்தம்பி மற்றும் வெ. தர்மகுலசிங்கம் இவர்கள் யாவரையும் பாடசாலைச் சமூகம் என்றும் நன்றியுடன் நினைவுகூறும்.

---

வேவில் வளவு, வல்வெட்டியை வதிவிடமாகக் கொண்ட அமரர் சபாபதிப்பிள்ளை கிருஷ்ணசாமி ஞாபகார்த்தமாக அவரது மகள் திருமதி சுதர்ஷனி சண்முகநாதன் அவர்கள் பாடசாலைக்கு புதிதாக ஒரு பேச்சாளர் மேடை(**ROSTRUM**) அமைப்பதற்காக ரூ.15000.00 வை அன்பளிப்பு செய்துள்ளார். அவர்களுக்கும் இவ்வேளையில் நன்றிகூறுகின்றோம்

## 2016 இல் மாணவர் விபரம்

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 01 | 15 | 13 | 28 |
| 02 | 03 | 08 | 11 |
| 03 | 08 | 05 | 13 |
| 04 | 12 | 06 | 18 |
| 05 | 10 | 05 | 15 |
| மொத்தம் | 48 | 37 | 85 |

## பாடசாலையின் ஆளணி விபரம்

01. திரு. வே. மகேந்திரன் — SLTS 1
02. திரு. ஆ. தங்கரூபன் — SLTS 1
03. திருமதி சி. கௌரிநாதன் — SLTS 1
04. திருமதி சி. கமலசிங்கம் — SLTS 2-1
05. திருமதி ஸ்ரீ. சாந்தகுமார் — SLTS 2-1
06. திருமதி ச. ராஜசங்கர் — SLTS 2-1
07. திரு. பொ. உதயகுமார் — SLTS 2-1

* ELRTC ஆசிரியர் செல்வி அனோஜா

## புதிதாக இவ்வருடம் இணைந்துகொண்டோர்

திரு. பொ. உதயகுமார்

## பாடசாலையில் இயங்கிவரும் குழுக்களும் மன்றங்களும்

* பாடசாலை அபிவிருத்திக்குழு
* பாடசாலை முகாமைத்துவ அணி
* பாடசாலை ஒழுங்காற்றுக் குழு
* பெறுகைக் குழு
* தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு

* பாடசாலை வரவுக் குழு
* கட்டாய கல்விக் குழு
* அனர்த்த முகாமைத்துவக் குழு
* பாடசாலை சுகாதாரக் குழு
* பாடசாலை உள்ளக மேற்பார்வைக் குழு
* இந்துமா மன்றம்
* சுற்றாடல் கழகம்

## மேலும் தீர்க்கப்படவேண்டிய தேவைகள்

* நிரந்தர சுத்திகரிப்பு தொழிலாளி நியமிக்கப்பட வேண்டும்.
* கணனிகள் குறைந்தது ஐந்து தேவை.
* கணனி கற்பிக்கும் ஆசிரியர் (தொண்டு அடிப்படையில்)
* விளையாட்டுத்திடல் மண் நிரப்பப்படல் வேண்டும்.
* பல் ஊடக சாதனம் (Multi media Projector)
* Band set
* மேல்மாடி வகுப்பறைகளுக்கு மட்டசீற் அடிக்கப்பட வேண்டும்.
* பல்நோக்கு மண்டபத்துடன் கூடிய நிர்வாகத் தொகுதிக்குரிய புதிய மாடிக்கட்டிடம் நிர்மாணிக்கப்படல் வேண்டும்.
* பாடசாலையை அழகுபடுத்த தேவையான கட்டுமானப் பணிகள் பூர்த்தியாக்கப்படல் வேண்டும்.

# பரிசளிப்பு விழா 2016

## தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை - 2016

**❄ 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | ஆனந்தராஜ் புவிஷாந் | 145 |
| 2. | கயிலைநாதன் கிரிஷிகன் | 128 |
| 3. | குலேஸ்வரன் காருண்யா | 121 |
| 4. | சுதாகர் ஹார்மிலன் | 118 |
| 5. | மயூரன் ஹாமினி | 115 |
| 6. | நந்தகுமார் லக்ஷிகா | 114 |
| 7. | பாலசுந்தரம் மேரிஜஸ்மின் | 101 |

**❄ 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | சசிந்தன் பிரியந்தன் | 97 |
| 2. | யோகநாதன் குருஷிகன் | 97 |
| 3. | பிரகாஷ் சந்தியா | 94 |
| 4. | சந்திரமோகன் அபிராஜ் | 89 |
| 5. | சுரேஸ்குமார் லோசன் | 78 |

## பாடங்களில் உயர்புள்ளி

**தரம் 01**

| | | |
|---|---|---|
| மொழி | - | த. தனுஸ்காந் |
| கணிதம் | - | த. தனுஸ்காந் |
| சுற்றாடல் சா.செ. | - | த. தனுஸ்காந் |
| சமயம் | - | த. தனுஸ்காந் |
| | | த. அபிர்னாஸ் |

**தரம் 02**

| | | |
|---|---|---|
| மொழி | - | ச. சாகித்தியா |
| கணிதம் | - | ச. சாகித்தியா |
| சுற்றாடல் சா.செ. | - | ச. சாகித்தியா |
| சமயம் | - | ச. சாகித்தியா |

**தரம் 03**

| | | |
|---|---|---|
| மொழி | - | க. பவித்திரன் |
| கணிதம் | - | க. பவித்திரன் |
| சுற்றாடல் சா.செ. | - | க. பவித்திரன் |
| சமயம் | - | க. சாய்பிரசாத் |
| ஆங்கிலம் | - | க. சாய்பிரசாத் |

**தரம் 04**

| | | |
|---|---|---|
| மொழி | - | சா. சாம்பவி |
| கணிதம் | - | த. யதுஷன் |
| சுற்றாடல் சா.செ. | - | சா. சாம்பவி |
| சமயம் | - | சா. சாம்பவி |
| ஆங்கிலம் | - | சா. சாம்பவி |

**தரம் 05**

| | | |
|---|---|---|
| மொழி | - | ஆ. புவிஷாந் |
| கணிதம் | - | ஆ. புவிஷாந் |
| சுற்றாடல் சா.செ. | - | ஆ. புவிஷாந் |
| சமயம் | - | ஆ. புவிஷாந் |
| | | பா. மேரிஜஸ்மின் |
| ஆங்கிலம் | - | கு. காருண்ஜா |

**❋ வகுப்பு முதன்மை நிலை**

| | | |
|---|---|---|
| தரம் 01 | - | த. தனுஸ்காந் |
| தரம் 02 | - | ச. சாயித்தியா |
| தரம் 03 | - | க. பவித்திரன் |
| தரம் 04 | - | சா. சாம்பவி |
| தரம் 05 | - | ஆ. புவிஷாந் |

**❋ வரவொழுங்கு**

| | | |
|---|---|---|
| தரம் 01 | - | ஜெ. கஜனிகா |
| தரம் 02 | - | இ. நிஷாலி |
| தரம் 03 | - | வி. விந்துஷா |
| தரம் 04 | - | பா. யதார்த்தனா |
| தரம் 05 | - | ஆ. புவிஷாந் |
| | | ம. சாமினி |

## இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்

**தரம் 01**

| | | |
|---|---|---|
| ✲ **கோலம் போடுதல்** | - | 1. ம. அன்பெழினி<br>2. சி. கபிதரன்<br>3. வி. மதுஷன்<br>ச. ஓவியா |
| ✲ **மாலை கட்டுதல்** | - | 1. ந. அபினா<br>2. பொ. டிலக்ஷனா<br>3. பொ. டிலக்ஷியா<br>ஞா. ஆதீசன் |
| ✲ **பாவோதல்** | - | 1. ஞா. ஆதீசன்<br>2. ந. சகானா<br>3. த. தனுஸ்காந் |
| ✲ **பேச்சு** | - | 1. ஞா. ஆதீசன்<br>2. சு. கீர்த்திகன்<br>3. த. தனுஸ்காந் |
| ✲ **சித்திரப்போட்டி** | - | 1. ம. அன்பெழினி<br>2. த. தனுஸ்காந்<br>3. அ. திஷாந் |

**தரம் 02**

| | | |
|---|---|---|
| ✲ **கோலம் போடுதல்** | - | 1. சு. அஸ்வினி<br>2. ச. சாகித்தியா<br>3. பா. யனுஸ்ரிகா<br>இ. நிஷாலி |
| ✲ **மாலை கட்டுதல்** | - | 1. பி. துவாரகா<br>2. ஜெ. பூஜா<br>3. வ. வர்ஷா |
| ✲ **பாவோதல்** | - | 1. ச. சாகித்தியா<br>2. சு. அஸ்வினி<br>3. பி. துவாரகா<br>வ. வர்ஷா |

| | | |
|---|---|---|
| ✲ **பேச்சு** | - | 1. ச. சாகித்தியா<br>2. இ. நிஷாலி<br>3. சு. அஸ்வினி<br>ஜெ. பூஜா |
| ✲ **சித்திரப் போட்டி** | - | 1. கு. தனுசன்<br>2. சு. அஸ்வினி<br>3. பா. யனுஸ்ரிகா |
| ✲ **விரைவு கணிதம்** | - | 1. ச. சாகித்தியா<br>2. ஜெ. பூஜா<br>3. சு. அஸ்வினி |

**தரம் 03**

| | | |
|---|---|---|
| ✲ **கோலம் போடுதல்** | - | 1. க. பவித்திரன்<br>2. ஞா. சித்தாத்<br>3. பி. சஞ்ஜே<br>கோ. பிரதிஷா |
| ✲ **மாலை கட்டுதல்** | - | 1. க. சாய்பிரசாத்<br>2. வி. விந்துஷா<br>3. ஞா. ஆருஜன்<br>கெ. பிரதாபன் |
| ✲ **பாவோதல்** | - | 1. க. பவித்திரன்<br>2. க. சாய்பிரசாத்<br>3. ஞா. ஆருஜ்ன் |
| ✲ **பேச்சு** | - | 1. க. பவித்திரன்<br>2. ஞா. ஆருஜன்<br>3. க. சாய்பிரசாத் |
| ✲ **சித்திரப் போட்டி** | - | 1. ம. தமிழ்வேந்தன்<br>2. க. பவித்திரன்<br>3. க. சாய்பிரசாத் |
| ✲ **விரைவுகணிதம்** | - | 1. க. பவித்திரன்<br>2. ஞா. ஆருஜன்<br>3. க. சாய்பிரசாத் |

☼ **ஆங்கிலமொழித்தினம் -** **கவிதை** க. சாய்பிரசாத்
ஞா. ஆருஜன்
**வாசிப்பு** க. பவித்திரன்
**எழுத்து** க. சாய்பிரசாத்
ஞா. ஆருஜன்

**தரம் 04**

☼ **கோலம் போடுதல்** - 1. பா. யதார்த்தனா
2. சா. சரணன்
3. சா. சாம்பவி
கு. லதீசன்

☼ **மாலை கட்டுதல்** - 1. ஆ. கோபிஷாந்
2. கு. யதுஷன்

☼ **பாவோதல்** - 1. சா. சாம்பவி
2. சா. சரணன்
3. பா. யதார்த்தனா

☼ **பேச்சு** - 1. சா. சாம்பவி
2. ஆ. கோபிஷாந்
3. சா. சரணன்

☼ **சித்திரப் போட்டி** - 1. சா. சாம்பவி
2. சி. சுவேந்திரன்
3. கு. லதீசன்

☼ **விரைவு கணிதம்** - 1. சா. சாம்பவி
2. கி. சிவஜீன்
3. ஆ. கோபிஷாந்

☼ **ஆங்கிலமொழித்தினம் -** **கவிதை** சா. சாம்பவி
சு. சகானா
**வாசிப்பு** சா. சாம்பவி
**எழுத்து** சு. சகானா
சு. சங்கவி

☼ **தமிழ்மொழித்தினம் - இசையும் அசைவும்** சா. சாம்பவி

## தரம் 05

| | | |
|---|---|---|
| ☼ கோலம் போடுதல் - | 1. பி. சந்தியா | |
| | 2. ச. அபிராஜ் | |
| | 3. ம. சாமினி | |
| | ந. லக்ஷிகன் | |
| ☼ மாலை கட்டுதல் - | 1. க. கிரிஷிகன் | |
| | 2. பா. மேரிஜஸ்மின் | |
| ☼ பாவோதல் - | 1. க. கிரிஷிகன் | |
| | 2. பி. சந்தியா | |
| | 3. ஆ. புவிஷாந் | |
| | கு. காருண்ஜா | |
| ☼ பேச்சு - | 1. க. கிரிஷிகன் | |
| | 2. ஆ. புவிஷாந் | |
| | 3. ம. சாமினி | |
| ☼ சித்திரப்போட்டி - | 1. சு. ஹார்மிலன் | |
| | 2. சு. லோசன் | |
| | 3. பா. மேரிஜஸ்மின் | |
| ☼ விரைவு கணிதம் - | 1. ஆ. புவிஷாந் | |
| | 2. பா. மேரிஜஸ்மின் | |
| | 3. க. கிரிஷிகன் | |
| ☼ ஆங்கிலமொழித்தினம் - | கவிதை | கு. காருண்ஜா |
| | | ஆ. புவிஷாந் |
| | வாசிப்பு | ஆ. புவிஷாந் |
| | | ந. லக்ஷிகா |
| | எழுத்து | சு. ஹார்மிலன் |
| | | பா. மேரிஜஸ்மின் |
| ☼ தமிழ் மொழித்தினம் - | பாவோதல் | க. கிரிஸிகன் |
| | பேச்சு | ஆ. புவிஷாந் |
| | ஆக்கம் | ந. லக்ஷிகா |
| | எழுத்தாக்கம் | பா. மேரிஜஸ்மின் |
| | வாசிப்பு | கு. காருண்ஜா |
| ☼ சகல துறை - | ச. அபிராஜ் | |

# ELRTC Level I

**வாய்மொழி**

1. சு. அஸ்வினி M
2. இ. நிஷாலி M
3. ஜெ. பூஜா M
4. வ. வர்ஷா M

1. த. சந்தோஸ் S
2. கு. தனுசன் S
3. பி. துவாரகா S

**எழுத்து**

1. ச. சாகித்தியா D
2. ஜெ. பூஜா D

1. சு. அஸ்வினி M
2. இ. நிஷாலி M

1. ஹி. அப்சரா S

# Level II

**வாய்மொழி**

1. ஞா. ஆருஜன் M
2. க. சாய்பிரசாத் M

1. க. பவித்திரன் S
2. சு. அஜய் S

**எழுத்து**

1. க. சாய்பிரசாத் M

1. ஞா. சித்தாத்
2. ஞா. ஆருஜன்

# Level III

**வாய்மொழி**

1. சா. சாம்பவி M

1. ஆ. கோபிஷாந் S
2. பா. யதார்த்தனா S

**எழுத்து**

1. சா. சாம்பவி C

# Level IV

1. க. கிரிஷிகன் S
2. பா. மேரிஜஸ்மின் S

தமிழ்ப்பூங்கா, 0212264014